# யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்

## பரிசுத்தினம் - 2016

### அதிபர் அறிக்கை

**பிரதம விருந்தினர்**

**கௌரவ கல்வி அமைச்சர் த.குருகுலராஜா**

*(கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை,*
*இளைஞர் விவகார அமைச்சு, வட மாகாணம்)*

**சிறப்பு விருந்தினர்**

**உயர்திரு.அ.அகிலதாஸ்**

*(பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ் கல்வி வலயம்)*

**கௌரவ விருந்தினர்கள்**

**திரு.அ.விமலன்**

(சமூக சேவையாளர்)

**திரு.A.கிருபாகரன்**

*(அதிபர், கிருபா லேணர்ஸ், சாரதி பயிற்சிப் பாடசாலை)*

**2016.06.21**

உ
சிவமயம்

# யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்

## பரிசளிப்பு விழா - 2016

## அதிபர் அறிக்கை

**தலைவர்**
**திரு.இ.பசுபதீஸ்வரன்** *(அதிபர்)*

**பிரதம விருந்தினர்**
**கௌரவ கல்வி அமைச்சர் த.குருகுலராஜா**
*(கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை,*
*இளைஞர் விவகார அமைச்சு, வட மாகாணம்)*

**சிறப்பு விருந்தினர்**
**உயர்திரு.அ.அகிலதாஸ்**
*(பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ் கல்வி வலயம்)*

**கௌரவ விருந்தினர்கள்**
**திரு.அ.விமலன்** (சமூக சேவையாளர்)

**திரு.A.கிருபாகரன்**
*(அதிபர், கிருபா லேணர்ஸ், சாரதி பயிற்சிப் பாடசாலை)*

**2016.06.21**

## மகுட வாசகம்

"திரிகரணசுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்"

## தூர நோக்கு

"மாற்றமுறும் உலகிற்கு முகம் கொடுக்கக் கூடிய தரமான கல்வி வழங்குவோம்"

## நோக்கக்கூற்று

அனைத்து மாணவர்களுக்கும் வாழ்க்கைக்குப் பயன் தரும் வகையில் ஆங்கில மொழித் திறனைப் பெற ஊக்குவித்தல்.

மாணவர்கள் அனைவருக்கும் தகவல் தொழில் நுட்ப அறிவைப் புகுத்தல்

கணித விஞ்ஞானப் பாடத்துறைகளில் மாணவர்களின் ஆர்வத்தை வளர்த்தல்

இணைப்பாடவிதான செயற்பாடுகளின் அபிவிருத்தியினூடாக மாணவர்களின் சமநிலை ஆளுமையை மேம்படுத்தல்

ஒழுக்கம் உடையவரும் சமூகத்திற்கு பயன்தரக் கூடியவருமான மாணவர் சமுதாயத்தை வளர்த்தெடுத்தல்.

# அதிபர் அறிக்கை

அகிலம் எங்கும் தன் கருணையை பொழிந்து அனைத்து உயிர்களையும் காத்து நிற்கும் எல்லாம் வல்ல இறைவனை மனதில் இருத்தி இவ் அதிபர் அறிக்கையைச் சமர்ப் பிக்கின்றேன்.

ஈழமணித் திருநாட்டின் பழமையும் புதுமையும் கொண்டதான "செம்பாட்டுப் பாடசாலை" என்ற சிறப்புத் திருநாமம் கொண்டு விளங்கியதே இன்று நாம் காலடி பதித்துள்ள திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.

நீர் வளமும் நிலவளமும் கொண்ட வட புலத்தின் கண்ணே 188 பாடசாலைகளில் நடுநாயகமாக விளங்கிய எமது பாடசாலை உலகமெங்கும் பெயர் பொறித்த காலம் ஒன்று உண்டு. "குடை நிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர் நடைமெலிந்தோரினும் நண்ணினும் நண்ணுவர்" என்பதே போல் பின்வந்த காலங்கள் போர்ச்சூழலாலும் சிதறுண்டு போன இடப்பெயர்வுகளாலும் எம் மண்ணின் கல்வியில் தாக்கம் ஏற்பட்டது. அதனை நிவர்த்தி செய்ய வேண்டியது கல்வியியலாளர்கள் அனை வரினதும் கடமையாகும். இக் கல்வி வளாகம் பலதுறைசார்ந்த பெருமைமிக்க அறிஞர்களை யும் ஆன்மீக வாதிகளையும் உருவாக்கியது.

**பெருமதிப்புக்குரிய வடமாகாணக் கல்வி அமைச்சர் திருவாளர் தம்பிராசா குருகுலராஜா அவர்களே!**
**பிரதிக் கல்விப்பணிப்பாளர் அவர்களே!**
**கல்விப்புலம் சார்ந்த பெரியோர்களே!**
**பெருமைசால் பேராசிரியர்களே!**
**அயற்பாடசாலை அதிபர்களே!**
**ஆசிரிய ஆலோசகர்களே!**
**அயற்பாடசாலை ஆசிரியர்களே!**
**எம் பொருளாதாரத்தை மேம்பட வைக்கும் கல்விக்கொடையாளிகளாக விளங்கும் வர்த் தகப் பெருமக்களே!**
**பாடசாலை அபிவிருத்திக் குழுவின் உறுப்பினர் களே!**
**எமது பாடசாலையின் பழைய மாணவர்களே!**
**அறிவும் அனுபவமுமிக்க ஆசிரிய சகோதரர்களே!**
**நண்பர்களே!**
**இன்றைய பரிசளிப்பு விழாவின் கதாநாயகர் களாக விளங்கும் மாணவ மாணவிகளே!**

இன்றைய நாள் எமது பாடசாலையின் பொன்னின். குடத்திற்குப் பொட்டிட் டாற் போல் எமது பாடசாலையின் நாட்களில் மறக்க முடியாத திருநாள். வானமதின் வண்ண நிறத் தினைப் பாடசாலையின் நிறமாக நிற்கும் நீல வர்ணத்தை போன்று மாணவர் அறிவும் திறனும் ஆளுமையும் பரந்துபட்டு விளங்க வேண்டும். அதற்காகவே இவ்வாறான விழாக் கள் பாடசாலைகளில் நடாத்தப்படுகின்றன. இன்று பரிசைப் பெறும் மாணவர்களின் மகிழ்வும், பெற்றோரின் பெருமிதமும் ஏனைய மாணவர்க் கும் ஊக்கவிசையாகவும், உந்து சக்தியாகவும் மிளிரவேண்டும்.

எமது விழாவினை அலங்கரிக்க வந் திருக்கும் அத்தனை உள்ளங்களையும் முதலில் வருக வருகவென வரவேற்பதில் பேருவகை அடைகின்றேன்.

இன்றைய இந்நன்னாளிலே எமது அழைப்பினை ஏற்று தங்களது பலவித வேலை களின் மத்தியிலும் எம்மைக் கௌரவித்து இவ் விழாவினைச் சிறப்பிக்க முதன்மை

விருந்தினராக வருகை தந்திருக்கும் பெரு மதிப்பிற்குரிய வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் திருவாளர் தம்பிராசா குருகுலராஜா அவர்களே,

நீங்கள் ஆரம்பக்கல்வியை உடுவில் மகளிர் கல்லூரி, முரசுமோட்டை சென் அந்தோனியார் RCTMS கல்லூரி, சென்திரேசா கல்லூரியிலும், இடைநிலைக்கல்வி, உயர் கல்வியை முருகானந்தா மகா வித்தியாலயத்திலும் யாழ் ஹாட்லிக் கல்லூரியிலும் கற்று தேறினீர்கள். தங்கள் பட்டப்படிப்பினை மதுரை கிறிஸ்தவக் கல்லூரியில் கற்று இறுதிப் பரீட்சையிலே சிறந்த பெறுபேற்றினைப் பெற்று அகமகிழ்ந்தீர்கள். 1976 இல் ஆசிரிய நியமனத்தின் மூலம் கிளி/தருமபுரம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியப்பணியை ஆரம்பித்த நீங்கள் அப்பாடசாலையிலேயே அதிபராகப் பதவியுயர்வு பெற்று திறம்பட சேவையினை ஆற்றினீர்கள்.தொடந்து 1991 இல் கொத்தணி அதிபராக கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் பணியாற்றி அதன்பின்னர் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனையில் உதவிக் கல்விப்பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றீர்கள்.

1993 இல் கண்டாவளைக் கோட்டக் கல்விப்பணிப்பாளராகப் பணியாற்றிய தங்களின் உன்னதமான சேவையின் உயர்வாக 1998 இல் முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்று பல பாராட்டுக்களையும் பெற்றீர்கள். அதன்பின்னர் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளராகப் 2005 முதல் 2011 வரை மிகவும் நெருக்கடிமிக்க காலகட்டத்திலும் சிறந்த கல்விப் பணியை ஆற்றினீர்கள்.

தங்களின் அர்ப்பணிப்புமிக்க சேவையினால் மக்கள் மனங்களில் பதிந்த கல்வியியலாளனாக வடமாகாண சபையின் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சினை அலங்கரித்துக்கொண்டிருக்கின்றீர்கள்.

இத்தகைய சிறப்புக்கள் பலவற்றையும் தம்மகத்தே கொண்ட நீங்கள் எமது பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருப்பது எமது பாடசாலைச் சமூகத்திற்கு பெருங்கௌரவத்தை அளித்து நிற்கின்றது.

எமது சிறப்பு விருந்தினராக வருகை தந்து எம்மைக் கௌரவித்துக்கொண்டிருக்கும் யாழ்ப்பாண வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருவாளர் அருணாசலம் அகிலதாஸ் அவர்களே, நீங்கள் ஆரம்பக்கல்வியை யா/ஒட்டுவெளி அமெரிக்கமிசன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்திலும் பட்டப்படிப்பினை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் தளர்விலா மன உறுதியுடன் கற்று இறுதிப்பரீட்சையில் சிறப்புத் தேர்ச்சியினை எய்தி அகமகிழ்ந்ததுடன் பெற்றோரையும் மகிழச் செய்தீர்கள்.

1984 இல் கிடைத்த ஆசிரிய நியமனத்தின் மூலம் புத்தளம் அல் அக்ஷா தேசிய பாடசாலையில் ஆசிரியப் பணியை ஆரம்பித்த நீங்கள் 1994 இல் யா/கச்சாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் அதிபராகப் பதவியுயர்வு பெற்று அரும்பணியாற்றினீர்கள். தொடர்ந்து 2000 ஆண்டு யா/ கோப்பாய் மகா வித்தியாலயத்திலும், யா/ கோப்பாய்

கிறிஸ்தவக் கல்லூரியிலும் மிகச்சிறப்பான சேவையை ஆற்றினீர்கள். 2007 ஆம் ஆண்டில் யா/ கொக்குவில் இந்துக் கல்லூரியில் அதிபராகக் கடமையேற்று அப்பாடசாலையின் வரலாற்றில் என்றுமில்லாத பரீட்சைப் பெறுபேற்றிலும் பௌதிகவள அபிவிருத்தி யிலும் அக் கல்லூரியினை மிக உன்னத நிலைக்கு இட்டுச் சென்றீர்கள். இவ்வாறான அயராத முயற்சி யாலும் சமூகத்திற்கு ஆற்றிய சேவையாலும் தாங்கள் பதவியுயர்வுபெற்று தீவக, தென்மராட்சி வலயங்களில் பிரதிக் கல்விப் பணிப்பாளராளப் பணியாற்றினீர்கள். அதனைத் தொடர்ந்து நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு தங்கள் பணியை விருப்புடனும் அர்ப்பணிப்புடனும் செய்து வரும் வேளையில் 2016ஆம் ஆண்டு எமது யாழ்ப்பாண வலயத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளராகப் (கல்வி அபிவிருத்தி) பொறுப் பேற்று, யாழ்ப்பாண வலயப் பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அர்ப் பணிப்போடு சேவையாற்றி வருகின்றமை குறிப் பிடத்தக்கது.

இன்றைய பரிசுத்தின நன்நாளிலே கௌரவ விருந்தினர்களில் ஒருவராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற சமூக சேவையாளரும் தொழிலதிபருமாகிய திரு. அருணாசலம் விமலன் அவர்களே,

நீங்கள் "என் கடன் பணி செய்து கிடப் பதே" நோக்கோடு எமது சமூகத்திற்குத் தொண்டாற்றிக் கொண்டிருக்கின்றீர்கள் உங்களது உதவியால் எமது பாடசாலையின் பௌதிகவளம் சிறப்படைந்துள்ளது. காலத்தின் தேவையை அறிந்து சுத்தமான குடிநீர் வழங்கும் ஓர் குழாய்க் கிணற்றை அடித்துத் தந்து நீர் இறைக்கும் பம்பியினையும் அன்பளிப்புச் செய்து உதவியதுடன் எமது பாடசாலையின் மின்சாரம், விளையாட்டு மைதானம் செப்பனிடல் போன்ற இன்னோரன்ன அபிவிருத்திப்பணிகளை ஆற்றித்தந்த வன்னனாவீர் அந்தவகையில் தங்களது உதவியை இத்தருணத்தில் பாராட்டு வத்தோடு இன்று விழாவிற்கு கௌரவ விருந் தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டி ருப்பது எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது.

கௌரவ விருந்தினர்களில் இன் னொருவராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் கிருபா லேணர்ஸ் சாரதி பயிற்சிப் பாடசாலையின் அதிபர் A.கிருபாகரன் அவர்களே "மக்கள் சேவை மகேசன் சேவை" என்பதுக்கேற்ப தாங்கள் பல சேவைகளை ஆற்றிக்கொண்டிருப்பது பலரும் அறிந்ததே. அந்தவகையில் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக் காக ஆளப்பரிய சேவைகளை ஆற்றியுள் ளீர்கள் அது மாத்திரமல்லாது குறைந்த செலவில் நிலையான சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொடுப்பதில் பெருந் துணை புரிகின்றீர்கள். கடந்த இரண்டு வருடங் களாக எமது பாடசாலை அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு சஞ்சிகை வெளியீட்டுக்குத் தேவையான நிதியுதவியை அன்பளிப்பாக வழங்கியுள்ளீர்கள். இவ்வாறு அளப்பரிய சேவையை ஆற்றிக்கொண்டிருக்கும் தங் களுக்குச் சமூக ஆர்வலர்களால் "சமூகமாமணி" "சமூக திலகன்" எனும் பட்டங்களையும் பெற்றுள்ளீர்கள்.

அந்த வகையில் இன்றைய விழாவில் கௌரவ விருந்தினராக சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது பாடசாலைக்கு பெரு மையைத் தருகின்றது.

# மாணவர் வளம்

| | ஆண் | பெண் |
|---|---|---|
| 1 – 5 | 40 | 37 |
| 6 –13 | 181 | 247 |
| விசேடகல்வி | 10 | 05 |
| மொத்தம் | 241 | 289 |

## பாடசாலை ஆளணி விபரம்

| | |
|---|---|
| அதிபர் ளுடுீளு | 01 |
| உதவி அதிபர் | 01 |
| முதுகலைமாணி | 05 |
| கல்வி முதுமாணி | 02 |
| விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர் | 05 |
| விவசாயப் பட்டதாரி ஆசிரியர் | 01 |
| வர்த்தகப் பட்டதாரி ஆசிரியர் | 02 |
| கலைப் பட்டதாரி ஆசிரியர் | 16 |
| பயிற்றப்பட்ட ஆசிரியர் (ஆரம்பக்கல்வி) | 05 |
| பயிற்றப்பட்ட ஆசிரியர் (ஆங்கிலம்) | 02 |
| பயிற்றப்பட்ட ஆசிரியர் (விஞ்ஞானம்) | 02 |
| பயிற்றப்பட்ட ஆசிரியர் (கணிதம்) | 01 |
| பயிற்றப்பட்ட ஆசிரியர் (வர்த்தகம்) | 01 |
| பயிற்றப்பட்ட ஆசிரியர் (இந்துசமயம்) | 02 |
| பயிற்றப்பட்ட ஆசிரியர் (கிறிஸ்தவம்) | 01 |
| பயிற்றப்பட்ட ஆசிரியர் (உடற்கல்வி) | 01 |
| **மொத்தம்** | **48** |
| | |
| பாடசாலைப் பணியாளர்கள் | 02 |

## ஓய்வு பெற்றுச் சென்றோர்

**பிரதி அதிபர்**

திருமதி. சத்தியபாமா சிவகுமாரன்

இவரது ஓய்வுக்காலம் அமைதியாகவும் சிறப்பாகவும் அமைய வாழ்த்து கின்றேன்.

## இடமாற்றம் பெற்றுச் சென்றோர்

**ஆசிரியர்கள்**

| | |
|---|---|
| திருமதி.பி.கிருபராஜ் | ஆரம்பக்கல்வி |
| திருமதி.கா.அமிர்தலிங்கம் | விஞ்ஞானம் |
| திருமதி.ச.அருட்செல்வன் | கணக்கியல் |
| திரு.இ.ஜெயகரன் | விசேட கல்வி |
| திருமதி.மா.சிவநாதன் | கிறிஸ்தவம் |
| திருமதி. ஜெ. யோகானந்தம் | ஆங்கிலம் |
| திருமதி. தா. கேதீஸ்வரன் | விஞ்ஞானம் |
| திருமதி. வை. கனகராஜா | சமயம் |
| திருமதி. சு. சிவஞீ | வர்த்தகம் |
| திருமதி. த. சுரேஸ்குமார் | ஆரம்பக்கல்வி |
| திருமதி. க. சிவதாசன் | கணிதம் |

**கல்விசாரா உத்தியோகத்தர்**

திரு. சு. யோகராஜா

இவர்கள் எமது பாடசாலையில் ஆற்றிய சேவைக்கு மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் அவர்களின் சேவை அங்கு சிறக்க வாழ்த்துகின்றேன்.

## புதிதாக இணைந்து கொண்டோர்

**ஆசிரியர்கள்**

| | |
|---|---|
| திரு. சி. சோமேஸ்வரன் | ஆங்கிலம் |
| திருமதி. ஞீ. நட்டணேஸ்வரன் | வழிகாட்டலும் ஆலோசனையும் |

| | |
|---|---|
| திருமதி. கோ. சிவனொளிச்செல்வன் | கணக்கியல் |
| திருமதி. ச. சிறீதரன் | பொருளியல் |
| திருமதி.ச.நிமல் | கணிதம் |
| திருமதி. உ. சந்திரமோகன் | ஆரம்பக்கல்வி |
| திருமதி. பி. ஜெயகாந்தன் | தமிழ் |
| திருமதி. சு. அற்புதராஜா | விஞ்ஞானம் |
| திருமதி. சு. ரவிலிங்கென் | கிறிஸ்தவம் |
| திருமதி. யா. கோகுலறஞ்சன் | வரலாறு |

**கல்விசாரா உத்தியோகத்தர்**

திரு. சூ. கிருபா

இவர்களைப் பாடசாலைச் சமூகம் மகிழ்ச்சியுடன் வரவேற்பதுடன் அவர்கள் பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

## தொண்டர் ஆசிரியர்கள்

செல்வி சி. கஜிதா

செல்வி. இ. மதுரிகா

இவர்களது சேவையைப் பாராட்டுவதோடு நிரந்தர நியமனம் பெற்று அவர்களது பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

## வாண்மை விருத்திக் கற்கைநெறியினை மேற்கொள்வோர்

| | |
|---|---|
| திருமதி.சு.ரவிலிங்கென் | MA |
| திரு.தி.ஸ்ரீசந்திரகுமார் | Dip.in.Edu |

இவர்கள் வாண்மை விருத்தி கற்கை நெறியில் சிறப்பான தேர்ச்சிகளைப் பெறுவதற்கும் அவர்களது சேவை எமது பாடசாலைக்கு கிடைப்பதற்கும் எமது பாராட்டுக்கள்.

# பெறுபேறுகள்

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2015ல் சித்தியடைந்தோர்

| | |
|---|---|
| செல்வன்.பா.ஹரிவர்மா | 155 புள்ளிகள் |

## க.பொ.த (சா/த) 2014இல் சிறந்த பெறுபேறு பெற்றோர்

| | |
|---|---|
| செல்வி. ர. துஸ்யந்தினி | 4A 1B 1C 2S |
| செல்வன் கோ. சாலமன் | 4A 1B 1C 2S |
| செல்வன் ச. திவாஸ்கரன் | 4A 1B 1C 2S |
| செல்வி. ற. காமினி | 3A 3B 1C 2S |
| செல்வி. ஜீ. யாழினி | 3A 3B 1C 2S |
| செல்வன் ச. சிஶ்ரீகாந் | 3A 3B 2C |
| செல்வி. கி. டில்கா | 3A 3B 2S |


## க.பொ.த (உ/த) 2015இல் சிறந்த பெறுபேறு பெற்றோர்

| | |
|---|---|
| செல்வி. ரா. அறிவழகி | ABB |
| செல்வியோ. கேதாரணி | ABC |
| செல்வி. க. சோபனா | ABC |
| செல்வி. கோ. வினோஜிதா | ACC |
| செல்வி. தி. கேதீஸ்வரி | ABC |
| செல்வி. தி. குறிஞ்சி | ABC |
| செல்வி. செ. ராஜினி | ABC |
| செல்வி. த. துளசிகா | ACS |
| செல்வி த. கோகுலமதி | ABS |


## பல்கலைக்கழக அனுமதி பெற்றோர் - 2014

| | |
|---|---|
| செல்வி. த. சரணியா | கலைப்பீடம் |
| செல்வி த. ரேவதி | கலைப்பீடம் |
| செல்வி. ர. கவீனா | கலைப்பீடம் |
| செல்வி. த. துளசிகா | கலைப்பீடம் |
| செல்வி. கு. விபுசா | கலைப்பீடம் |
| செல்வன் .த. ஜெனோசன் | கலைப்பீடம் |


## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் - 2015





## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிக்கு மேல் பெற்றோர் - 2015



## க.பொ.த (சா/த பெறுபேறு) - 2015



# க.பொ.த (உ/த பெறுபேறு) - 2015



## பாடசாலை அபிவிருத்திக்குழு

தலைவர் : அதிபர் திரு. இ. பசுபதீஸ்வரன்

செயலாளர் : திரு. தி. செல்வமனோகரன்
(ஆசிரியர் யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி)

பொருளாளர் : திருமதி.கோ. சிவனொளிச்செல்வன்

வலயப்பிரதிநிதி: திரு. அ. அகிலதாஸ் (பிரதிக்கல்விப் பணிப்பாளர், யாழ் வலயம்)

இச்சங்கத்தின் நிர்வாகக் கட்டமைப்பில் 16 பேர் உள்ளனர். எமது பாடசாலையின் வளர்ச்சியிலும் விருத்தியிலும் பாடசாலை அபிவிருத்திக் குழுவின் வகிபாகம் முக்கியமான தொன்றாகும். ஆசிரியர் அபிவிருத்தி, கல்வி அபிவிருத்தி, பௌதிகவள அபிவிருத்தி என பாடசாலை அபிவிருத்தியில் இக்குழு தனது பணிகளை முன்னெடுத்திருக்கின்றது. புதிய சுற்றறிக்கையின் பிரகாரம் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் உட்பட சகல அபி விருத்திப் பணிகளும் பாடசாலை அபிவிருத்திக் குழு ஊடாகவே மேற் கொள்ளப்படுகின்றன. அந்த வகையில் பாடசாலை வள ஆளணியினருக்கான கொடுப்பனவு, உள்ளகக் கட்டமைப்பு விருத்தி, பராமரிப்பு மற்றும் கல்விசார் செயற்பாடுகளுக்கு இக் குழு தனது பங்களிப்பினை செய்து வருகின்றது. அவர்களுக்கு எனது பாராட்டுக்களும் நன்றிகளும் உரித்தாகட்டும்.

## ஆசிரியர் நலன்புரிக்கழகம்

தலைவர்: திருமதி. அ. இளங்கோவன்

உபதலைவர்: திரு. சி. சோமேஸ்வரன்

செயலாளர்: திருமதி. ச. சிறீதரன்

உபசெயலாளர்: திருமதி. க. கபிலன்

பொருளாளர்: திருமதி. சோ. அரவிந்தன்

ஆசிரியர் நலன்புரிக் கழகமானது ஆசிரியர் நலனோன்பு விடயங்களில் மாத்திர மல்லாது மாணவர்களின் நலனிலும் இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் உதவியும் ஒத்தாசையும் புரிந்து வருகின்றது. “முன் ஏர் போகும் வழி பின் ஏர் போகும்” என்பதற்கு இணங்க சென்ற வருடத்தில் எமது உபஅதிபருக்கான மணிவிழாவினைச் சிறப்பாக இக்கழகமானது நிறைவேற்றியுள்ளது.அதுமட்டுமல்லாமல் பாடசாலையின் சுகாதார மேம்பாட்டிலும், ஏனைய நிர்வாகச் செயற்பாடுகளிலும் பெரும்பங்காற்றிவருகின்றது. இக்கழகமானது மேலும் சிறப்பாகச் செயலாற்றுவதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக் களையும் ஆசிகளையும் வழங்குகின்றேன்.

## வழிகாட்டலும் ஆலோசனையும்

பொறுப்பாசிரியர்: திருமதி. ஸ்ரீ. றட்ணேஸ்வரன்

எமது பாடசாலையில் வழிகாட்டலும் ஆலோசனையும் செயற்பாடானது கடந்த வருடங்களைப் போன்று இவ்வருடமும் செயற்பட்டு வருகின்றது. வலய மாகாண உளவள நாள் போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களும் பெறப்பட்டுள்ளன. இச் சேவையின் மூலம் மாணவர்களது இடர்கள் இனங்காணப்பட்டு நிவர்த்தி செய்யப்பட்டு வருவதோடு அவர்களது ஆற்றல்கள் வெளிப்படுத்தப்படல், திறன்களை வளர்த்தல், கற்றலில் ஆர்வம், கட்டிளமைப்பருவ சவால்களை எதிர்கொள்ளல், எதிர்கால திட்மிடலை மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகளில் மாணவர்கள் ஆரோக்கியத்துடனும் வினைத்திறனுடனும் செயற்பட இவ் ஆலோசனைச் சேவையானது தனது பங்களிப்பினை ஆற்றி வருகின்றது. இச் சேவையானது தொடர்ந்தும் தனது செயற்பாடுகளை ஆற்றி மாணவர்களை உன்னத நிலைக்கு இட்டுச் செல்ல வாழ்த்துகின்றேன்.

## மாணவர் முதல்வர் சபை

பொறுப்பாசிரியர்: திரு.இ.ரகுமார்

இச்சபையானது எனது மேற்பார்வையின் கீழ் ஒழுக்காற்றுச்சபை உறுப்பினர்களின் ஆலோசனையுடன் சிறப்பாக இயங்கி வருகின்றது. இச்சபையில் 24 அங்கத்தவர்கள் சின்னஞ்சூட்டப்பட்டு தம் பணிகளை ஆற்றுகின்றார்கள் மாணவர்களின் ஒழுக்கம், கட்டுப்பாடு, நேரந்தவறாமை போன்ற நற்பண்புகளை வளர்ப்பதில் முனைப்புடன் செயற்படுகின்றார்கள். அத்துடன் பாடசாலை நிகழ்வுகளில் தாமும் ஈடுபடுவதோடு ஏனைய மாணவர்களையும் ஈடுபடச்செய்து பாடசாலையின் மேல் பற்றுக்கொள்ளச் செய்கிறார்கள் 2015 ஆம் ஆண்டிற்கான சிரேஸ்ட மாணவ தலைவனாக செல்வன் த.விஜிதரன் அவர்களும் உதவி சிரேஸ்ட மாணவ தலைவனாக செல்வன் சி.கமல்ராஜ் அவர்களும் சிரேஸ்ட மாணவர் தலைவியாக செல்வி கு.கம்சிகா அவர்களும் உதவி சிரேஸ்ட மாணவத் தலைவியாக செல்வி க.சரணியா அவர்களும் பதவிப்பிரமாணம் செய்யப்பட்டு தமது கடமைகளை செவ்வனவே ஆற்றுகின்றார்கள். இச்சபையின் சேவை மேலும் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

# இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்

எமது பாடசாலையின் இணைப்பாட விதானச் செயற்பாடுகள் ஆனது உயர்திறன் கொண்டவையாகக் காணப்படுகின்றன. தமிழ் மொழித்திறன், சமூகவிஞ்ஞானப் போட்டி, அழகியற் போட்டி, சமய அறிவுப்போட்டி, விளையாட்டுப் போட்டி போன்றவற்றில் மாணவர்கள் மகாண மட்டத்தில் தமது சாதனைகளை நிலைநாட்டி, எமது பாடசாலைக்கு பெருமையைச் சேர்த்துள்ளார்கள்.

## இந்து மாணவர் மன்றம்

பொறுப்பாசிரியர்

திருமதி.ப. சதானந்தன்

| | |
|---|---|
| தலைவர் | செல்வி:– நா. கயோந்தினி |
| செயளாளர் | செல்வி:– ச. சுகந்தினி |
| பொருளாளர் | செல்வி:– ச.தமிழினி |

இந்த மன்றமானது வருடா வருடம் தைப்பொங்கல், சித்திரைவருடப்பிறப்பு, ஆடிப்பிறப்பு போன்ற பண்டிகைகளையும் சமயகுரவர் குருபூசை தினங்களையும் கொண்டாடி வருகின்றது. மாணவர்களின் கலை, கலாச்சாரம், பண்பாட்டு விழுமியங்களைக் கட்டிக்காப்பாற்றி வளர்க்கும் நோக்குடன் ஆண்டு தோறும் பண்ணிசைப் போட்டி, சகலகலாவல்லி மாலை ஓதல்,தோரணம் பின்னுதல், மாலை கட்டுதல், கோலம்போடுதல் ஆகிய போட்டிகளை நடாத்தி பரிசில்களையும் வழங்கி வருகின்றது. மாணவர்கள் காலைப்பிராத்தனையின்போது தேவைப்படும் பூக்கள், மாலைகள் போன்றவற்றை வகுப்பு ரீதியாகத் தினமும் கொண்டு வந்து வழங்குவதன் மூலம் சரியைத் தொண்டை மாணவர்களுக்கு உணர்த்தி வருகின்றது. பிரதி வெள்ளிக்கிழமை தோறும் வெளியில் இருந்து சமயப்பெரியார்களை அழைத்து மாணவர்களுக்கு சமய வாழ்வியல் சம்மந்தமான கருத்துக்களை வழங்கிவருவதும் குறிப்பிடத்தக்கது.

## தமிழ்மன்றம்

பொறுப்பாசிரியர்:

திருமதி.சி.றோய்நேசராசா

| | | |
|---|---|---|
| தலைவர் | : | செல்வி.கா.சோனியா |
| செயலாளர் | : | செல்வி.ச.தமிழினி |
| பொருளாளர் | : | செல்வி.ச.சுகந்தினி |

எமது பாடசாலையின் தமிழ் மன்றமானது முத்தமிழையும் பண்பாட்டு விழுமியங்களையும் பேணுவதில் அக்கறைகாட்டி வருவதுடன் மாணவர்களிடையே மறைந்திருக்கும் மொழிசார் திறன் களை வெளிக்கொணரும் நோக்குடன் செயற்பட்டு வருகிறது.

அந்தவகையில் தமிழ் மன்றத்தினால் வருடந்தோறும் முத்தமிழ்விழா நடாத்தப்படுவதுடன் பாடசாலை மட்டத்தில் தமிழ் மொழித்தினப் போட்டிகளை நடாத்தி, வெற்றிபெற்ற மாணவர்களிற்கு சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது. அத்துடன் கோட்டமட்ட, வலையமட்ட, மாகாணமட்ட தமிழ் மொழித்தினப் போட்டிகளில் மாணவர்களைப் பங்குபெறச் செய்து பல வெற்றிகளும் பெறப்பட் டுள்ளன. அந்த வகையில் கடந்த இரண்டு வருடங்களாக மாகாண மட்டத்தில் தமிழ்அறிவு வினாவிடைப் போட்டியில் 2014ம் ஆண்டு 2ம் இரண்டாம் இடத்தினையும் 2015ம் ஆண்டில் 3ம் இடத்தினையும் பெற்ற எமது மாணவர்கள் இவ்வருடம் (2016) 1ம் இடத்தினைப் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகி உள்ளமை எமது பாடசாலைக்குப் பெருமையைத் தந்துள்ளது. இவர்களுக்கு எனது மனம் நிறைந்த பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிப்பதோடு, இம் மாணவர்களை நெறிப்படுத்தி வெற்றியீட்டச் செய்த ஆசிரியர் திருமதி.வி.சடாட்சரம் அவர்களுக்கும் இத்தருணத்தில் மனம் நிறைந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### சுகாதார மன்றம்

பொறுப்பாசிரியர்:

திருமதி.வி.செந்தூரான்

தலைவர் : செல்வன் ம.அனிஷ்டன்

செயலாளர் : செல்வி.க.சர்மிதா

இம் மன்றத்தினால் பாடசாலையின் சிரமதான நிகழ்வுகள், சமூக விழிப்புணர்வு களான போதைப்பொருள் ஒழிப்பு, டெங்கு ஒழிப்பு, உணவுப் போசணை தொடர்பான பெற்றோர், மாணவர், ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் போன்றன நடாத்தப்படுவதுடன் மாணவர்களுக்கான உடல் ஆரோக்கியம் தொடர்பாக BMI சுட்டி கணிக்கப்பட்டதுடன் பற் சுகாதாரமும் மாணவரது ஆரோக்கியமும் பேணப்பட்டு வருகின்றது. இம்மன்றத்தின்செயற்பாடுகள் மேலும் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

### நுண்கலை மன்றம்

பொறுப்பாசிரியர்:

திரு. வ. தயாநிதி

தலைவர் : செல்வன். கோ. சாலமன்

செயலாளர் : செல்வி. செ. ஜென்சி

பொருளாளர் : செல்வி. ய. துஸ்யந்தி

இம்மன்றமானது வருடந்தோறும் அழகியற் கண்காட்சிகள் நடாத்துவதுடன் கோட்ட, வலய, மாகாண மட்டப் போட்டிகளுக்கு மாணவர்கள் தயார்படுத்தி வெற்றியீட்டச் செய்துள்ளது. அத்துடன் பாடசாலை தவிர்ந்த வேறு நிறவனங்களின் கலை நிகழ்வுகள், போட்டிகளில் மாணவர்களைப் பங்குபற்றச் செய்து பரிசில்கள் பெற நெறிப்படுத்தி உள்ளது. இம்மன்றத்தின் செயற்பாடுகளானது மேலும் சிறப்புற வாழ்த்துகிறேன்.

## சமூக விஞ்ஞான மன்றம்

பொறுப்பாசிரியர்:

திரு.க.சதீஸ்வரன்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | செல்வி.த.லாவண்யா |
| செயலாளர் | : | செல்வி.தி.யவநிதா |
| பொருளாளர் | : | செல்வி.தே.தனுசியா |

இம் மன்றமானது மாணவர்களுக்கு சமூக விஞ்ஞான பாடங்களின் அறிவை மேம்படுத்தும் வகையில் நிகழ்ச்சிகளை நடாத்தி வருகின்றது. அத்துடன் சமூக விஞ்ஞானப் போட்டிகளுக்கு மாணவர்களை தயார்படுத்தி பங்குபெறச் செய்வதுடன் கோட்ட, வலய, மாகாண மட்டங்களில் சான்றிதழ்கள் கிடைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இம்மன்றத்தின் செயற்பாடுகளானது மேலும் சிறப்புற வாழ்த்துகிறேன்.

## விசேட கல்வி அலகு

பொறுப்பாசிரியர்:

திரு.ப.சுரேந்திரன்

எமது பாடசாலையின் விசேட கல்வி அலகானது 20 மாணவர்களுடன் மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றது. இம் மாணவர்களுக்கு விசேட கல்வி அலகில் சிறந்த கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறுவதுடன் பல்வேறுபட்ட புறச்சீர்திருத்தச் செயற் பாடுகளிலும் ஈடுபடுத்தப்படுகின்றனர். அத்தோடு விளையாட்டுப்போட்டி, சித்திர ஆக்கப் போட்டி, கவின்கலைப் போட்டி என்பவற்றிலும் பங்குபற்றி மாகாண மட்டத்திலும் சிறந்த இடங்களினைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள். இவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக் களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# விசேட கல்வி அலகு மாணவர்களின் சாதனைகள் – 2015

| போட்டி நிகழ்ச்சி | மாணவர் பெயர் | வலய மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|
| நின்று நீளம் பாய்தல் | செல்வன்.ர.சங்கீதன் | 01 | |
| நீர் நிரப்புதல் | செல்வன்.ச.பரமேஸ்வரன் | 02 | 03 |
| நீர் நிரப்புதல் | செல்வன்.ஶ்ரீ.ஶ்ரீநிலக்சன் | 01 | |
| 100m நின்று நீளம் பாய்தல் | செல்வி.த.ரெபேக்கா | 01 | 04 |
| ஊண்டுகோல் நடை | செல்வன்.இ.கஜன் | 01 | |
| நீர் நிரப்புதல் | செல்வன்.ஜி.துஷ்யந்தன் | 03 | |
| 100m | செல்வன்.மு.சாருகான் | 01 | |
| 100m | செல்வன்.ப.ஜீவாகரன் | 03 | |
| சித்திரப்போட்டி | செல்வன்.ஶ்ரீ.ஶ்ரீநிலக்சன் | | 01 |
| சித்திரப்போட்டி | செல்வன்.ர.சங்கீதன் | | 03 |

# சாதனையாளர்கள் - 2015

## (கோட்ட, வலய, மாகாண மட்டம்)

| இல | போட்டி நிகழ்ச்சி | மாணவர் பெயர் | கோட்டம் | வலயம் | மாகாணம் |
|---|---|---|---|---|---|
| 01 | தமிழறிவு வினாவிடை | அறிவழகி | 01 | 01 | 03 |
| | | கோகுலமதி | | | |
| | | ராஜினி | | | |
| | | டசோ | | | |
| | | சிவரஞ்சினி | | | |
| 02 | சமூக வினாவிடைப்போட்டி | ஜெ.யன்சிகா | 01 | 02 | |
| 03 | இலக்கணப் போட்டி அறிவழகி | | 01 | 02 | |
| 04 | கட்டுரைப்போட்டி | சிவரஞ்சினி | 01 | 02 | |
| 05 | இலக்கியத்திறனாய்வு | சோபனா | | 02 | |
| 06 | கவிதை | சயந்தியி | | 03 | |
| 07 | கதப்பிரசங்கம் | தமிழினி | | 03 | |
| 08 | சமய அறிவுப்போட்டி | சி.குறிஞ்சி | | 02 | |
| | | க.சோபன | | 02 | |
| | | சுகந்தினி | | 01 | |
| 09 | சைவபரிபாலனசபை பேச்சு | சோபனா | | 03 | |
| 10 | நாட்டுக்கூத்து | பிரதீபன் | | 01 | |
| | | ச.ரிசிகேஷன் | | | |
| | | ர.டனுசாந் | | | |
| | | ந.முருகதாஸ் | | | |
| | | உ.டினோஜன் | | | |
| | | ல.கோபிநாத் | | | |
| | | ஜெ.சங்கீதன் | | | |
| | | க.கிருஷாந்தன் | | | |
| | | யோ.பாஸ்கரன் | | | |
| | | யோ.சுஜகா | | | |
| | | ர.நவிந்தா | | | |
| | | கி.துஷந்தினி | | | |
| | | ச.பிரசாந்தி | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | சமூக நாடகம்(அருளாளசீலர்) | | | 03 | |
| | | ப.பிரதீபன் | | | |
| | | கா.ரமேஸ்குமார் | | | |
| | | யோ.சுஜீகா | | | |
| | | க.கிருசாந்தன் | | | |
| | | ஜெ.சங்கீதன் | | | |
| | | தெ.ரிஷாந்தன் | | | |
| | | பு.சுகிர்தா | | | |
| | | த.வேணுஜன் | | | |
| 12 | சித்திரப்போட்டி | நா.சர்மிலன் | 02 | | |
| 13 | மனைப்பொருளியல் | | | | |
| | குறுவினாவிடை போட்டி | நா.கயோந்தினி | 03 | | |
| | | சுஜீபா | 02 | | |
| | | சஞ்சீகா | 03 | | |
| 14 | ஆக்கப்போட்டி | வி.செ.நிவேதினி | 03 | | |
| 15 | பண்ணிசைப்போட்டி – குழு | ச.கிருசாளினி | 01 | 02 | |
| | | கோ.சானுசா | | | |
| | | கு.வினிசா | | | |
| | | ர.துஸ்சியந்தினி | | | |
| | | அ.சர்மினி | | | |
| | | ம.தர்சினி | | | |
| | | கி.துசாந்தினி | | | |
| | | ச.பிரியங்கா | | | |
| | | ஞா.தனுசா | | | |
| | | கோ.வினிதா | | | |
| 16 | பண்ணிசைப்போட்டி – தனி | கோ.சாலமன் | 02 | | |
| 17 | தட்டெறிதல் | ற.டசோ | 01 | 01 | 04 |
| 18 | செயற்பாட்டு மகிழ்வோம் | | | | |
| | | தரம் 4 | 02 | 06 | |
| | | தரம் 5 | 02 | 06 | |

## பாடசாலையில் நிறைவேற்றப்பட்ட வேலைத்திட்டங்கள்

- E - learning வகுப்பறை உருவாக்கப்பட்டது.
- வகுப்பறைக் கூரைகள் திருத்தப்பட்டது.
- மாணவர் மலசலகூடம் திருத்தப்பட்டது.
- ஆபத்து நிலையில் இருந்த சுப்பிரமணியம் மண்டபம் அகற்றப்பட்டது
- எமது பாடசாலையின் பட்ட மரத்திலிருந்து 80 மாணவர் கதிரை, மேசைகள் செய்யப்பட்டன.
- சம்பத் வங்கியின் உதவியுடன் நீர்த்தாங்கி (பிளாஸ்டிக்) மூலம் மாணவர்களுக்கான குடிநீர் வசதி வழங்கப்பட்டது.
- பாடசாலை சிற்றூண்டிச்சாலை அமைக்கப்பட்டது.
- சுத்தமான குடிநீர் விநியோகத்திற்கான நோக்கோடு குழாய்க்கிணறு அமைக்கப்பட்டது.
- ஜப்பான் அரசு நல்லுறவு அடிப்படையில் பிரதான மண்டபத்தின் மேல் மாடிக்கட்டடம், விசேட கல்வி அலகுக்கான கட்டடம், மாணவர்களுக்கான கதிரை, மேசைகள் போன்ற பௌதிக வள அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

## எமது பாடசாலை மாணவர் கல்வி மேம்பாட்டிற்கு தேவையான வளங்கள்

- அதிபர் அலுவலகம்
- கற்றல் வள நிலையம்
- விஞ்ஞான ஆய்வு கூடம்
- தொழிநுட்ப ஆய்வு கூடம்
- கணினி தொழிநுட்ப ஆய்வு கூடமும் அதற்கான 25 கணினிகளும்
- போட்டோ பிரதி இயந்திரம்
- அழகியல் கூடம்
- மாணவர் ஒன்று கூடல் மண்டபம்
- நீர்தாங்கி
- E - learning வகுப்புக்குரிய மேசை, கதிரைகள்
- விளையாட்டு மைதானத்திற்கான பார்வையாளர் மண்டபம்
- பெண்கள் மலசலகூடம்
- ஆசிரியர் மலசலகூடம்

# நன்றி நவிலல்

எமது பாடசாலையில் பிரதான விழாவாக விளங்கும் இன்றைய நன்னாளிலே அதிபர் அறிக்கையின் நிறைவாக நன்றி நவில்வதில் அக மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது அழைப்பை ஏற்று வருகை தந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் திருவாளர் தர்மராசா குருகுலராசா அவர்களே! தங்களைத் தொடர்பு கொண்டு அழைத்த போது இன்முகத்துடன் ஏற்று வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்றீர்கள். தங்கள் வரவு எமக்கு மகிழ்ச்சியைத் தந்துள்ளது. தங்களுக்கு எமது இதயம் கனிந்த நன்றிகள்.

மேலும் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணக் கல்வி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. அ.அகிலதாஸ் அவர்களக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் கௌரவ விருந்தினர்களாக வருகை தந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் சமூக சேவையாளரரும் தொழிலதிபருமாகிய திரு. ஆ.விமலன் அவர்களுக்கும், கிருபா லேணேர்ஸ், பயிற்சிப் பாடசாலையின் அதிபராகிய திரு A. கிருபாகரன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மேலும் இங்கு வருகை தந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப்பணிப்பாளர், வங்கி முகாமையாளர்கள் உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அயற்பாடசாலை ஆசிரியர்கள், சங்கமம் நூல் சிறப்புப்பிரதியை பெற்றுக்கொள்வதற்காக வருகை தந்திருக்கும் அனைத்து உள்ளங்களிற்கும் எனது நன்றிகள்.

மேலும் பாடசாலைக் கல்வி வளர்ச்சியிலும், பௌதிகவள அபிவிருத்தியிலும் பெரும் பங்காற்றிக்கொண்டிருக்கும் பாடசாலை அபிவிருத்திக் குழுவினருக்கும், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

மேலும் எமது பாடசாலையின் வருடாந்த சஞ்சிகையினை வெளியிடுவதற்கு எமக்கு நிதியுதவி வழங்கிய வர்த்தக பிரமுகர்கள் அனைவருக்கும் அம்மலரானது சிறந்த முறையில் வெளியிடுவதற்கு அயராது உழைத்த மலர்வெளியீட்டுக் குழுவினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் எமது பாடசாலையின் விளைதிறனை மெருகூட்ட வினைத்திறனுடனும் அயராது உழைத்துக் கொண்டிருக்கும் உப அதிபர், பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள். இவ் அறிக்கையினை குறுகிய காலத்தில் சிறப்பாக அச்சிட்டு தந்த மதி கலர் அச்சகத்தினருக்கும் எனது நன்றிகள்.

**அதிபர்**

**யா/முத்துத்தம்பி ம.வி**

# பாடப் பரிசில் பெறுவோர் விபரம் – 2015

**தரம் 01**

| பெயர் | பாடம் | நிலை |
|---|---|---|
| செல்வன் ரா. டிலான் | தமிழ் | 01 |
| | சுற்றாடல் | 01 |
| | கணிதம் | 02 |
| செல்வன் ஜெ. மதுஸ்கரன் | கணிதம் | 01 |
| | தமிழ் | 02 |
| | சுற்றாடல் | 02 |
| செல்வன் ம. பிரதீப் | தமிழ் | 03 |
| | கணிதம் | 03 |
| | சுற்றாடல் | 03 |

**தரம் 02**

| பெயர் | பாடம் | நிலை |
|---|---|---|
| செல்வன் பா. ஹரிகரன் | தமிழ்மொழி | 01 |
| | சுற்றாடல் | 01 |
| | கணிதம் | 01 |
| | சமயம் | 01 |
| செல்வி இ. ஜஸ்மியா | தமிழ்மொழி | 02 |
| | சுற்றாடல் | 02 |
| | கணிதம் | 02 |
| | சமயம் | 02 |
| செல்வி அ. டர்மினி | தமிழ்மொழி | 03 |
| | சுற்றாடல் | 03 |
| | கணிதம் | 03 |
| | சமயம் | 03 |
| செல்வி ர. சலோமி | கிறிஸ்தவம் | 01 |

**தரம் 03**

| | | |
|---|---|---|
| செல்வன் சே. மதுஷிகன் | தமிழ்மொழி | 01 |
| | சுற்றாடல் | 01 |
| | கணிதம் | 01 |
| | ஆங்கிலம் | 01 |
| | சமயம் | 01 |
| செல்வி ர. டனிசாயினி | தமிழ்மொழி | 02 |
| | சுற்றாடல் | 02 |
| | கணிதம் | 02 |
| | சமயம் | 02 |
| | ஆங்கிலம் | 03 |
| செல்வன் வி. திவ்வியன் | கிறிஸ்தவம் | 01 |
| | ஆங்கிலம் | 02 |
| செல்வி சி. சிலோஜிக்கா | தமிழ்மொழி | 03 |
| | சுற்றாடல் | 03 |
| | கணிதம் | 03 |
| | சமயம் | 03 |
| செல்வி ர. சலோமி | கிறிஸ்தவம் | 01 |
| செல்வி ச. பிரவீணா | கிறிஸ்தவம் | 02 |
| செல்வன் லோ. தனுசன் | கிறிஸ்தவம் | 03 |

**தரம் 04**

| | | |
|---|---|---|
| செல்வி ச. சபரிகா | தமிழ்மொழி | 01 |
| | சுற்றாடல் | 01 |
| | கணிதம் | 01 |
| | ஆங்கிலம் | 01 |
| | கிறிஸ்தவம் | 01 |
| செல்வன் யோ. மதுசன் | தமிழ்மொழி | 02 |
| | சுற்றாடல் | 02 |
| | கணிதம் | 02 |
| | கிறிஸ்தவம் | 02 |

| | | |
|---|---|---|
| செல்வி மை. சார்மி | ஆங்கிலம் | 02 |
| செல்வி வி. லக்சனா | ஆங்கிலம் | 03 |
| செல்வன் ச. கனிஸ்ரன் | சமயம் | 01 |
| | கணிதம் | 02 |
| | சுற்றாடல் | 02 |
| செல்வன் க. யதுசன் | சமயம் | 02 |
| செல்வி நா. மதுசாளினி | சமயம் | 03 |

**தரம் 05**

| | | |
|---|---|---|
| செல்வன் பா. ஹரிவர்மா | தமிழ்மொழி | 01 |
| | கணிதம் | 01 |
| | சுற்றாடல் | 01 |
| | ஆங்கிலம் | 01 |
| | சமயம் | 01 |
| செல்வி ர. சாயினி | கிறிஸ்தவம் | 01 |
| | தமிழ்மொழி | 01 |
| | சுற்றாடல் | 03 |
| | ஆங்கிலம் | 03 |
| | கணிதம் | 03 |
| செல்வன் கெ. டனிஸ்ரன் | கணிதம் | 02 |
| | சுற்றாடல் | 02 |
| | ஆங்கிலம் | 02 |
| | சமயம் | 02 |
| | சுற்றாடல் | 03 |
| செல்வி அ. அனஸ்ரிக்கா | தமிழ்மொழி | 03 |
| | சமயம் | 03 |
| செல்வி சி. ஜெனுசியா | கிறிஸ்தவம் | 02 |

**தரம் 06**

| | | |
|---|---|---|
| செல்வன் பி. மிதுஷன் | சமயம் | 01 |
| | தமிழ் | 03 |
| செல்வி சி. திருசியா | தமிழ் | |
| | வரலாறு | |
| | குடியுரிமைக்கல்வி | |
| | சங்கீதம் | 01 |
| | கணிதம் | 02 |
| | ஆங்கிலம் | 02 |
| | புவியியல் | 03 |
| செல்வி. ர. யதுஷா | சமயம் | 02 |
| | குடியுரிமைக்கல்வி | 02 |
| | சங்கீதம் | 02 |
| | ஆங்கிலம் | 03 |
| | வரலாறு | 03 |
| செல்வி. தி. தயாளினி | ஆங்கிலம் | 01 |
| | விஞ்ஞானம் | 01 |
| | தமிழ் | 02 |
| செல்வி. கு. கஜானி | நடனம் | 01 |
| | தமிழ் | 02 |
| | புவியியல் | 02 |
| | சமயம் | 03 |
| | குடியுரிமைக்கல்வி | 03 |
| | விஞ்ஞானம் | 03 |
| செல்வி. சு. அனோஜா | கணிதம் | 01 |
| | சங்கீதம் | 02 |
| செல்வன். பி. மிதுர்சன் | தமிழ் | 03 |
| செல்வன் செ. ரவீணன் | குடியுரிமைக்கல்வி | 02 |
| | சங்கீதம் | 03 |

| | | |
|---|---|---|
| செல்வி. ந. தனுஷியா | சித்திரம் | 01 |
| செல்வன் சி. சரண்ராஜ் | சித்திரம் | 02 |
| செல்வன். யோ. லக்ஸ்மன் | சித்திரம் | 03 |
| செல்வி. க. மர்மதா | நடனன் | 03 |
| செல்வன் ர. குயின்சன் | நாடகமும் அரங்கியலும் | 01 |
| செல்வன் த. தாதுஜன் | நாடகமும் அரங்கியலும் | 02 |
| செல்வன் ச. சுபானுசன் | நாடகமும் அரங்கியலும் | 03 |

**தரம் 07**

| | | |
|---|---|---|
| செல்வன் ச. ரிஷிகேசன் | சமயம் | 01 |
| | தமிழ் | 01 |
| | கணிதம் | 01 |
| | விஞ்ஞானம் | 01 |
| | புவியியல் | 01 |
| | குடியுரிமைக்கல்வி | 01 |
| | சுகாதாரமும் உடற்கல்வியும் | 01 |
| | செயன்முறைத் தொழில்நுட்பம் | 01 |
| | சங்கீதம் | 01 |
| | ஆங்கிலம் | 02 |
| | வரலாறு | 02 |
| செல்வன் க. நிந்துஜன் | புவியியல் | 01 |
| | விஞ்ஞானம் | 02 |
| | சங்கீதம் | 02 |
| | கணிதம் | 03 |
| | வரலாறு | 03 |
| | சுகாதாரமும் உடற்கல்வியும் | 03 |

| | | |
|---|---|---|
| செல்வி ஞா. மேரிடிலானி | சமயம் | 02 |
| | தமிழ் | 02 |
| | புவியியல் | 03 |
| | குடியுரிமைக்கல்வி | 03 |
| | செயன்முறைத்தொழில்நுட்பம் | 03 |
| செல்வன். யோ. பவராஜ் | சித்திரம் | 01 |
| | கணிதம் | 02 |
| | புவியியல் | 02 |
| | குடியுரிமைக்கல்வி | 02 |
| | சுகாதாரமும் உடற்கல்வியும் | 02 |
| | விஞ்ஞானம் | 03 |
| செல்வி. சி. வானுஜா | சமயம் | 03 |
| | கர்நாடகசங்கீதம் | 03 |
| செல்வி. தி. சஞ்சிகா | தமிழ் | 03 |
| செல்வி. சு. சயந்தா | ஆங்கிலம் | 03 |
| செல்வி. பி. மிதுஷா | செயன்முறைத்தொழில்நுட்பம் | 02 |
| செல்வன் சி. பிரகாஷ் | நாடகமும் அரங்கியலும் | 01 |
| செல்வன் யு. பிரசாந் | நாடகமும் அரங்கியலும் | 02 |
| செல்வன் ச. யஸ்ரின் | நாடகமும் அரங்கியலும் | 03 |

**தரம் 08**

| | | |
|---|---|---|
| செல்வி ச. சப்திகா | சமயம் | 01 |
| | கணிதம் | 01 |
| | செயன்முறைத்தொழினுட்பம் | 01 |
| | வரலாறு | 01 |
| | ஆங்கிலம் | 02 |
| | சுகாதாரமும் உடற்கல்வியும் | 02 |

| | | |
|---|---|---|
| | தமிழ் | 03 |
| | புவியியல் | 03 |
| | குடியுரிமைக்கல்வி | 03 |
| செல்வி. த. சரண்யா | தமிழ் | 01 |
| | ஆங்கிலம் | 01 |
| | குடியுரிமைக்கல்வி | 01 |
| | சுகாதாரமும் உடற்கல்வியும் | 01 |
| | பரதநாட்டியம் | 01 |
| | கணிதம் | 02 |
| செல்வன் ஜோ. புவிராஜ் | சித்திரம் | 01 |
| | தமிழ் | 02 |
| | ஆங்கிலம் | 03 |
| | விஞ்ஞானம் | 03 |
| செல்வன் பா. சரண்யன் | செயன்முறைத்தொழில்நுட்பம் | 02 |
| | நாடகமும் அரங்கியலும் | 02 |
| செல்வி. ச. கார்த்திகா | விஞ்ஞானம் | 01 |
| | புவியியல் | 01 |
| | வரலாறு | 02 |
| | குடியுரிமைக்கல்வி | 02 |
| | பரதநாட்டியம் | 02 |
| | சமயம் | 03 |
| | கணிதம் | 03 |
| | சுகாதாரமும் உடற்கல்வியும் | 03 |
| | செயன்முறைத்தொழில்நுட்பம் | 03 |
| செல்வி. கெ. குணமதி | கணிதம் | 03 |
| செல்வி. ல. லஜீனா | விஞ்ஞானம் | 02 |
| | புவியியல் | 02 |
| | பரதநாட்டியம் | 03 |

| | | |
|---|---|---|
| செல்வன். தி. லதுர்சன் | வரலாறு | 03 |
| | சங்கீதம் | 03 |
| செல்வி. சி. தாரணி | சித்திரம் | 02 |
| செல்வன் . ஜெ. ஜெகிந் | சித்திரம் | 03 |
| செல்வி. ச. சஜீவா | சங்கீதம் | 01 |
| செல்வன் சி. அபிசாந் | சங்கீதம் | 02 |
| செல்வன் ச. சாருஜன் | நாடகமும் அரங்கியலும் | 01 |
| செல்வன் த. பிரதீபன் | நாடகமும் அரங்கியலும் | 03 |

**தரம் 09**

| | | |
|---|---|---|
| செல்வி. க. சர்மிதா | தமிழ் | 01 |
| | சமயம் | 01 |
| | விஞ்ஞானம் | 01 |
| | புவியியல் | 01 |
| | குடியுரிமை | 01 |
| | சுகாதாரமும் உடற்கல்வியும் | 01 |
| | செயன்முறைத் தொழினுட்பம் | 01 |
| செல்வி. சு. சுரேக்கா | தமிழ் | 02 |
| | சமயம் | 02 |
| | விஞ்ஞானம் | 02 |
| | ஆங்கிலம் | 02 |
| | புவியியல் | 02 |
| | குடியுரிமை | 02 |
| | சுகாதாரமும் உடற்கல்வியும் | 02 |
| செல்வி. பு. சுகிர்தா | ஆங்கிலம் | 01 |
| | நாடகமும் அரங்கியலும் | 01 |

| | | |
|---|---|---|
| | தமிழ் | 03 |
| | சமயம் | 03 |
| | வரலாறு | 03 |
| | குடியுரிமை | 03 |
| | சுகாதாரமும் உடற்கல்வியும் | 03 |
| செல்வன் ம. அனிஸ்ரன் | சித்திரம் | 01 |
| | வரலாறு | 02 |
| | விஞ்ஞானம் | 03 |
| | புவியியல் | 03 |
| செல்வன். ஶ்ரீ. யுபேக்கா | செயன்முறைத் தொழினுட்பம் | 02 |
| செல்வி. கோ. வஜிதா | நடனம் | 03 |
| | செயன்முறைத் தொழினுட்பம் | 03 |
| செல்வன் ந. முருகதாஸ் | நாடகமும் அரங்கியலும் | 01 |
| செல்வி. ஞா. ஜீலோனா | சங்கீதம் | 02 |
| செல்வி. கி. டிலக்சனா | சங்கீதம் | 03 |
| செல்வி. ம. யதுர்திகா | நடனம் | 01 |
| செல்வி. ஜெ. ஜென்சனா | நடனம் | 02 |

**தரம் 10**

| | | |
|---|---|---|
| செல்வி. த. வேணுஜா | சைவநெறி | 01 |
| | தமிழ் | 01 |
| | வரலாறு | 01 |
| | ஆங்கிலம் | 01 |
| | ஆங்கில இலக்கியநயம் | 01 |
| | ICT | 01 |
| | கணிதம் | 02 |

| | | |
|---|---|---|
| | வணிகக்கல்வி | 02 |
| | விஞ்ஞானம் | 03 |
| செல்வி. சி. பிறின்சிகா | கணிதம் | 01 |
| | விஞ்ஞானம் | 01 |
| | வணிகக்கல்வி | 01 |
| | சமயம் | 02 |
| | தமிழ் | 02 |
| | ICT | 02 |
| செல்வி. சு. மயூரி | நடனம் | 01 |
| | குடியுரிமைக்கல்வி | 02 |
| | சமயம் | 03 |
| | தமிழ் | 03 |
| | வரலாறு | 03 |
| | ஆங்கிலம் | 03 |
| | ICT | 03 |
| செல்வி. ஜெ. ஜெதுசலா | கிறிஸ்தவம் | 01 |
| | சங்கீதம் | 02 |
| செல்வி சு. சோணியா | கிறிஸ்தவம் | 02 |
| செல்வி. யோ. கோகுலவாணி | விவசாயம் | 02 |
| | கணிதம் | 03 |
| செல்வி. ச. சஞ்சிகா | புவியியல் | 01 |
| | மனைப்பொருளியல் | 01 |
| | நடனம் | 02 |
| | விஞ்ஞானம் | 02 |
| செல்வி ச. சுஜீபா | தமிழ் இலக்கியநயம் | 01 |
| | மனைப்பொருளியல் | 02 |
| | வணிகக்கல்வி | 03 |

| | | |
|---|---|---|
| செல்வி செ. நிவேதினி | ஆங்கிலம் | 02 |
| | குடியுரிமைக்கல்வி | 02 |
| | மனைப்பொருளியல் | 03 |
| செல்வி ச. சோபனா | குடியுரிமைக்கல்வி | 03 |
| | தமிழ் இலக்கியநயம் | 03 |
| செல்வி ச. சதீசனா | புவியியல் | 02 |
| செல்வன் த. ரிஷாந் | சித்திரம் | 02 |
| | சுகாதாரமும் உடற்கல்வியும் | 03 |
| | புவியியல் | 03 |
| செல்வன் கு. சயந்தன் | விவசாயம் | 01 |
| | சங்கீதம் | 03 |
| செல்வன். சு. யதுர்ஷன் | சித்திரம் | 01 |
| | சுகாதாரமும் உடற்கல்வியும் | 02 |
| செல்வி அ. லக்ஷி | சித்திரம் | 03 |
| செல்வன் சி. மதன்ராஜ் | சுகாதாரமும் உடற்கல்வியும் | 01 |
| | தமிழ் இலக்கியநயம் | 02 |
| செல்வன் அ. ராஜ்குமார் | நாடகமும் அரங்கியலும் | 01 |
| செல்வன் து. சதுர்ஷன் | நாடகமும் அரங்கியலும் | 02 |
| | வியவசாயம் | 03 |

**தரம் 11**

| | | |
|---|---|---|
| செல்வி க. கோபிஷா | சமயம் | 01 |
| | கணிதம் | 01 |
| | விஞ்ஞானம் | 01 |
| | மனைப்பொருளியல் | 01 |
| | தமிழ் | 02 |
| | ஆங்கிலம் | 02 |

| | | |
|---|---|---|
| | வரலாறு | 02 |
| | வர்த்தகமும் கணக்கியலும் | 02 |
| செல்வி. ச. துஜீவனா | தமிழ் | 01 |
| | சமயம் | 02 |
| | நடனம் | 03 |
| | ICT | 02 |
| செல்வன் பா. ஹரிதர்சன் | ஆங்கிலம் | 01 |
| | சங்கீதம் | 03 |
| செல்வி சி. சிவதர்சினி | குடியுரிமைக்கல்வி | 02 |
| | சங்கீதம் | 02 |
| | சமயம் | 03 |
| | சுகாதாரமும் உடற்கல்வியும் | 03 |
| செல்வன் ச. ரிஷிவரன் | சுகாதாரமும் உடற்கல்வியும் | 02 |
| | சித்திரம் | 02 |
| | தமிழ் | 03 |
| | விஞ்ஞானம் | 03 |
| | வரலாறு | 03 |
| செல்வன். அ. மதுராஜ் | வரலாறு | 01 |
| | நாடகமும் அரங்கியலும் | 01 |
| | வர்த்தகமும் கணக்கியலும் | 01 |
| செல்வி. த. தேவகி | விஞ்ஞானம் | 02 |
| | கணிதம் | 03 |
| | நாடகமும் அரங்கியலும் | 03 |
| | குடியுரிமைக்கல்வி | 03 |
| செல்வி. சோ. துவர்சிகா | குடியுரிமைக்கல்வி | 01 |
| | மனைப்பொருளியல் | 02 |

| | | |
|---|---|---|
| செல்வி. சோ. சுபஸ்திகா | ஆங்கிலம் | 03 |
| செல்வி. இ. கஸ்தூரி | நாடகமும் அரங்கியலும் | 02 |
| | மனைப்பொருளியல் | 03 |
| செல்வி. கி. ஹம்சா | ICT | 01 |
| | நடனம் | 02 |
| செல்வி. ச. பிரியங்கா | சங்கீதம் | 01 |
| | சுகாதாரமும் உடற்கல்வியும் | 01 |
| செல்வன் யோ.சங்கராபரண்ணன் | தமிழ் இலக்கியல் | 02 |
| | வர்த்தகமும் கணக்கியலும் | 03 |
| செல்வி. அ. மதஷா | தமிழ் இலக்கியம் | 01 |
| செல்வி வி. சுரேஹா | தமிழ் இலக்கியம் | 03 |
| செல்வன் ஜெ. ஜெனிஸ்ரன் | ICT | 03 |
| செல்வன் சி. சிந்துஜன் | சித்திரம் | 01 |
| செல்வன் மா. நிதுர்சன் | சித்திரம் | 03 |
| செல்வி. ஜெ. ஜெகதாசினி | நடனம் | 01 |

**தரம் 12 (A/L 2016)**

| | | |
|---|---|---|
| செல்வி. தே. லாவண்யா | தமிழ் | 01 |
| செல்வி. ச. சுகந்தினி | இந்துநாகரிகம் | 01 |
| | அரசியல் | 01 |
| செல்வி. செ. யன்சிகா | வரலாறு | 01 |
| | நாடகமும் அரங்கியலும் | 01 |

| | | |
|---|---|---|
| செல்வி. ஜெ. வானுஜா | புவியியல் | 01 |
| செல்வி நா. கயோந்தினி | மனைப்பொருளியல் | 01 |
| செல்வி. க. யான்சினி | கிறிஸ்தவம் | 01 |
| செல்வி. கா. சோணியா | ஆங்கிலம் | 01 |
| செல்வி. கிருசா | வணிகக்கல்வி | 01 |
| | கணக்கீடு | 01 |
| செல்வி. சி. கமல்ராஜ் | பொருளியல் | 01 |

**தரம் 13(A/L2015)**

| | | |
|---|---|---|
| செல்வி. ரா. அறிவழகி | தமிழ் | 01 |
| | வரலாறு | 01 |
| | சங்கீதம் | 01 |
| செல்வி. செ. ராஜினி | பொருளியல் | 01 |
| | தமிழ் | 02 |
| | சங்கீதம் | 02 |
| செல்வி. சி. சிவரஞ்சனி | பொருளியல் | 02 |
| | சங்கீதம் | 02 |
| | ஆங்கிலம் | 02 |
| செல்வி. N. ஜெயநந்தினி | இந்துநாகரிகம் | 01 |
| | புவியியல் | 01 |
| செல்வி. S. வினோஜிதா | நடனம் | 01 |
| செல்வி. K. சோபனா | இந்துநாகரிகம் | 02 |
| செல்வி கோகுலமதி | மனைப்பொருளியல் | 01 |

| | | |
|---|---|---|
| செல்வி. T. குறிஞ்சி | மனைப்பொருளியல் | 02 |
| செல்வன். M. தர்மராசா | புவியியல் | 02 |
| செல்வி. N. அனுசியா | வரலாறு | 02 |
| செல்வன். S. றகின்சன் | சித்திரம் | 01 |
| செல்வன். T. பிரசாந் | ஆங்கிலம் | 01 |

**க.பொ.த (சா/த) 2014 இல் சிறந்த பெறுபேறு பெற்றவர்களுக்கான பரிசில்கள்**

| | |
|---|---|
| செல்வி. ர. துஸ்யந்தினி | 4A 1B 1C 2S |
| செல்வன் கோ. சாலமன் | 4A 1B 1C 2S |
| செல்வன் ச. திவாஸ்கரன் | 4A 1B 1C 2S |
| செல்வி. ற. காமினி | 3A 3B 1C 2S |
| செல்வி. ஜீ. யாழினி | 3A 3B 1C 2S |
| செல்வன் ச. சிஶ்ரீகாந் | 3A 3B 2C |
| செல்வி. கி. டீல்கா | 3A 3B 2S |

**க.பொ.தி (உ/த) 2015 இல் சிறந்த பெறுபேறு பெற்றவர்களுக்கான பரிசில்கள்**

| | |
|---|---|
| செல்வி. ரா. அறிவழகி | ABB |
| செல்வியோ. கேதாரணி | ABC |
| செல்வி. க. சோபனா | ABC |
| செல்வி. கோ. வினோஜிதா | ACC |
| செல்வி. தி. கேதீஸ்வரி | ABC |
| செல்வி. தி. குறிஞ்சி | ABC |
| செல்வி. செ. ராஜினி | ABC |
| செல்வி. த. துளசிகா | ACS |
| செல்வி த. கோகுலமதி | ABS |

**2014ல் பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களுக்கான பரிசில் பெறுவோர்**

| | |
|---|---|
| செல்வி. த. சரணியா | கலைப்பீடம் |
| செல்வி த. ரேவதி | கலைப்பீடம் |
| செல்வி. ர. கவீணா | கலைப்பீடம் |
| செல்வி. த. துளசிகா | கலைப்பீடம் |
| செல்வி. கு. விபுசா | கலைப்பீடம் |
| செல்வன் .த. ஜெனோசன் | கலைப்பீடம் |

# கல்லூரிக்கீதம்

திரிகரண சுத்தியும் காரிய சித்தியும்
தருவாய் வருவாய் அருள்வாயே
வருமொழி பலவும் சிவநெறி மலரும்
பரவிடும் முத்துத்தம்பி மகா வித்தியாலயம்
வளமுடன் நாமும் வளம் பெற நாளும்
வழிதனைக் காட்டிடும் வித்தியாலயமே

திருநெல்வேலி ஊர் செய் பெருந்தவத்தால்
தண் தமிழ் ஓங்கிட கலை பலவும்
திருவளர் அறிவினைத் திறமுடன் ஊட்ட
திருக்கரம் நீட்டிடும் வித்தியாலயமே

வாழ்க நம் மகா வித்தியாலயமே
பண்புற வாழ்கெனப் பணிந்திடுவோம்
வாழிய வாழிய வாழிய எனவே
வளமுடன் வாழ வாழ்த்தி நிற்போம்

வாழிய எங்கள் வித்தியாலயமே
வாழிய வாழிய வாழியவே
வாழிய வாழிய வாழியவே
வாழிய வாழிய வாழியவே.

அச்சமைப்பு: மதி கலர்ஸ் நல்லூர். 021 222 9285